பொருளடக்கம்

குகைவாசிகள் கொள்கைப் பாதை / 7

குகைவாசிகள் பதிப்பகப் பாதை / 16

ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு / 21

1 அறிமுகம் / 25

கடமைகள் குறித்த நினைவூட்டல் / 27

கடமைகள் குறித்த கல்வி முக்கியம் / 28

நற்குணங்கள் நமது மார்க்கத்தின் தனித்துவம் / 30

இப்னு பாஸ் அவர்களின் அழகிய அழைப்புப்பணி / 32

அழைப்புப்பணியுடன் நற்குணங்களையும் பேணுவோம் / 33

கடமைகளைப் பேணுதல் அல்லாஹ்வுக்குக்
கீழ்ப்படிவதாகும் / 34

2 முதியோர்களின் உரிமைகள் / 36

முதியவருக்குக் கண்ணியமுண்டு / 36

முதியோர்களுக்குக் கூடுதல் கண்ணியமும் உண்டு / 37

நபியவர்களின் அழகிய அணுகுமுறை / 38

முஸ்லிமல்லாத மூத்தவரும் மதிக்கப்பட வேண்டியவரே! / 40

தனிச்சிறப்பும் கண்ணியமும் தாய் தந்தைக்கு உண்டு / 41

குர்ஆனும் நபிவழியும் வலியுறுத்துகின்ற பண்பு / 43

3 முதியோர்கள் குறித்த மார்க்கக்கல்வியைக்
கற்றுக்கொள்ளுங்கள் / 46

4 கடமையைச் சரியாகச் செய்ய
அல்லாஹ்விடம் உதவி தேடுங்கள் / 47

5 பலவீனர்களை ஆதரித்து ஆயுளிலும்
ஆரோக்கியத்திலும் பரக்கத் அடையுங்கள் / 49

6 நீங்கள் செய்வதுதான் உங்களுக்கும் செய்யப்படும் / 51

7 நபித்தோழர்கள், நல்லோர்களின்
முன்மாதிரியைப் பின்பற்றுங்கள் / 53

8 பெரியோரிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும்? / 55
முதலாவது: கண்ணியப்படுத்துதல் / 55
இரண்டாவது: நல்ல முறையில் பேசுதல் / 56
மூன்றாவது: முதலில் ஸலாம் சொல்லுதல் / 56
நான்காவது: அன்பும் மரியாதையும் கொண்ட வார்த்தையால் அழைத்தல் / 57
ஐந்தாவது: பேச்சில் அவர்களை முந்தாமல் இருத்தல் / 58
ஆறாவது: அவர்களின் வயோதிகத்தையும் பலவீனத்தையும் புரிந்து அணுகுதல் / 60
ஏழாவது: அவர்களுக்காக துஆ செய்தல் / 63
எட்டாவது: தொடர்ந்து உபகாரம் செய்தல் / 65

2

முதியோர்களின் உரிமைகள்

❀

முதியவருக்குக் கண்ணியமுண்டு

வயோதிகர் தந்தையாகவோ உறவினராகவோ அண்டை வீட்டுக்காரராகவோ முஸ்லிமாகவோ முஸ்லிமல்லாதவராகவோ யாராக இருப்பினும் அவருக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்ய வேண்டும் என்று மார்க்கம் கூறியுள்ளது.

நபி ﷺ அவர்கள் கூறியதாக ஸஹீஹான ஒரு ஹதீஸில் வந்துள்ளது. அபூ மூஸா அல்அஷ்அரி ؓ அறிவிக்கிறார்கள்:

إِنَّ مِنْ إِجْلاَلِ اللَّهِ إِكْرَامَ ذِى الشَّيْبَةِ الْمُسْلِمِ وَحَامِلِ الْقُرْآنِ غَيْرِ الْغَالِى فِيهِ وَالْجَافِى عَنْهُ وَإِكْرَامَ ذِى السُّلْطَانِ الْمُقْسِطِ

முஸ்லிமான வயோதிகரைக் கண்ணியப்படுத்துவதும் (ஓதுவதில்) வரம்பு கடந்து நடக்காத, குறை வைக்காத, குர்ஆனைச் சுமந்துள்ளவரை கண்ணியப்படுத்துவதும் நீதமான ஆட்சியாளரைக் கண்ணியப்படுத்துவதும் அல்லாஹ்வை மேன்மைப்படுத்துகிற விசயமாகும். (ஸுனனு அபீ தாவூது 4843, ஸஹீஹுத் தர்ஙீப் வத்தர்ஹீப் 98)

ஆகவே, இந்த மூன்று விதமான நபர்களை கண்ணியப்படுத்தினால் அல்லாஹ்வை மேன்மைப்படுத்துவதாகப் பொருளாகும். இந்தக் கடமைகளில் குறைவைத்தால் அல்லாஹ்வுடைய கடமைகளில் குறை வைப்பதாகப் பொருளாகும். ஏனென்றால், அகிலங்களின் இறைவனான அல்லாஹ் நன்மையும் அழகும் பரிபூரணத்துவமும் நிறைந்திருக்கக்கூடிய இந்தக் காரியத்தின்பால் உனக்கு அழைப்பு விடுக்கிறான். நீ குறை வைத்தால் அகிலங்களின் இறைவனான அல்லாஹ்வைக் கண்ணியப்படுத்துவதில் நீ நடந்துகொள்கிற முறை பலவீனமானதாக

3

முதியோர்கள் குறித்த மார்க்கக்கல்வியைக் கற்றுக்கொள்ளுங்கள்

❀

முதியோர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் குறித்தும் அதன் முக்கியத்துவம் குறித்தும் குர்ஆனும் ஸுன்னாவும் கூறுகிற ஆதாரங்களை நாம் அறிந்துகொள்ள வேண்டும். அது குறித்த ஆதாரங்கள் இறைநம்பிக்கையாளர்களின் உள்ளங்களிலும் உண்மையான இதயங்களிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். அல்லாஹ்வின்மீது ஆணையாக! பின்பும் அல்லாஹ்வின்மீது ஆணையாக! முஸ்லிமான வயோதிகரைக் கண்ணியப்படுத்துவது அல்லாஹ்வை மேன்மைப் படுத்துகிற விசயமாக இருக்கும் என்று நம்முடைய நபி ﷺ அவர்கள் கூறியுள்ள வார்த்தை அப்பழுக்கில்லாத இதயத்தில் இடம்பிடித்தால் அது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். அப்படித்தான் 'நம்மில் உள்ள பெரியவர்களைக் கண்ணியப் படுத்தாதவன் நம்மைச் சேர்ந்தவனல்ல' என்ற நபிமொழியும் ஆகும். இந்த ஆதாரங்களையும் இந்த நபிமொழிகளையும் நாம் கேட்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம். அப்போதுதான் நன்மை செய்வதற்கு இது உதவியாக இருக்கும். நன்மை என்பது பல படித்தரங்களையும் பல அந்தஸ்துகளையும் உடையது. அதன் முதல் படித்தரம் காது கொடுத்துக் கேட்பது. பிறகு விளங்குவது. பிறகு அதன்படிச் செயல்படுவது. இது பல படித்தரங்கள் கொண்டதாகும். அடியான் இதிலே கொஞ்சம் கொஞ்சமாக முன்னேற வேண்டும்.

ஆகவேதான் கல்வி கற்கும்படியும் கல்வி கற்றுத் தரப்படுகிற சபைகளில் அமரும்படியும் மார்க்கம் கூறுகிறது. ஏனென்றால், ஒரு முஸ்லிம் எல்லாச் சிறப்புகளையும் நன்மைகளையும் அடைந்துகொள்வதற்கு இதுவே வாயிற்படி ஆகும்.

4

கடமையைச் சரியாகச் செய்ய அல்லாஹ்விடம் உதவி தேடுங்கள்

❀

இந்தக் கடமையைச் சரியாக செய்வதற்கு அல்லாஹ்விடத்தில் நீ உதவி தேட வேண்டும். அவனிடத்தில் நீ ஒதுங்க வேண்டும்.

நபி ﷺ அவர்கள் கூறுவார்கள்:

احْرِصْ عَلَى مَا يَنْفَعُكَ وَاسْتَعِنْ بِاللَّهِ

உமக்குப் பலன் தருகிற காரியத்தின்மீது நீர் பேராசைப்படு வீராக. (அதைச் செய்வதற்கு) அல்லாஹ்விடத்தில் நீர் உதவி தேடுவீராக. (அறிவிப்பு: அபூ ஹுறைறா ؓ, முஸ்லிம் 2664)

إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ

நாங்கள் உன்னையே வணங்குகிறோம்; உன்னிடமே உதவி தேடுகிறோம். (குர்ஆன் 1:4)

فَاعْبُدْهُ وَتَوَكَّلْ عَلَيْهِ

ஆகவே, அவன் ஒருவனையே நீர் வணங்குவீராக! அவன் மீதே பொறுப்புச் சாட்டுவீராக! (குர்ஆன் 11:123)

எனவே, இந்தக் கடமைகளை நீ செயல்படுத்த வேண்டுமென் றால் அல்லாஹ்வுடைய உதவியும் நல்வாய்ப்பும் உமக்கு இருக்க வேண்டும். நபி ﷺ அவர்கள் முஆது இப்னு ஜபல் ؓ அவர்களிடம், 'முஆதே நான் உங்களை நேசிக்கிறேன்' என்று கூறினார்கள். அப்போது முஆத் அவர்கள் 'அல்லாஹ்வின் தூதரே! நானும் உங்களை நேசிக்கிறேன்' என்று கூறினார்கள். அப்போது நபி ﷺ அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்:

فَلاَ تَدَعْ أَنْ تَقُولَ فِي كُلِّ صَلاَةٍ رَبِّ أَعِنِّي عَلَى ذِكْرِكَ ، وَشُكْرِكَ ، وَحُسْنِ عِبَادَتِكَ

7

நபித்தோழர்கள், நல்லோர்களின் முன்மாதிரியைப் பின்பற்றுங்கள்

❀

நல்லோர்களான நம்முடைய ஸலஃப்[5] எனும் முன்னோர்கள் பெரியோர்களுடன் ஒழுக்கமாக நடந்துகொண்டும், அவர்களுக்குக் கண்ணியம் செலுத்தியும், மரியாதை செலுத்தியும், அவர்களுடைய கடமைகளை நிறைவேற்றியவாறும் இருந்திருக்கிறார்கள். அந்த பரக்கத் பொருந்திய நிலையை நீ சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவர்களைப் போலவே நீயும் பேணுதலோடு வயோதிகர்களைக் கண்ணியப்படுத்த வேண்டும்.

நபித்தோழர்கள் மற்றும் அவர்களை நல்வழியில் பின்பற்றி நடந்தவர்களுடைய வாழ்க்கை வரலாற்றுப் புத்தகங்களை ஆய்வு செய்து பார்த்தால், அவர்கள் வாழ்ந்த மணமிக்க, மூன்னுதாரணமான, இனிமையான நிகழ்வுகளை நீ காணலாம். மேலும், ஸஹாபாக்களிலும் தாபிஈன்களிலும் வாலிபர்களாக

5 ஸலஃப் (السَّلَفُ): முன்சென்றோர். ஸாலிஹ் என்றால் நல்லோர். நல்ல முன்னோர்கள் எனும் பொருளில் அஸ்ஸலஃப் அஸ்ஸாலிஹ் / ஸலஃபுஸ் ஸாலிஹீன் என்று கூறப்படும். இந்தச் சொற்கள் நபித்தோழர்களையும் அவர்களைப் பின்பற்றிய தாபிஈன், தபஉ தாபிஈன் ஆகிய மூன்று தலைமுறைகளைக் குறிப்பிடுகிறது. இவர்களை நபியவர்கள் மனிதர்களில் சிறந்தவர்கள் எனப் புகழ்ந்துள்ளார்கள். இவர்கள் அனைவரும் மார்க்கத்தில் எந்தப் புதுமைகளையும் (பித்அத்) ஏற்படுத்தாமல் நேரான பாதையில் நிலைத்திருந்தார்கள். எனவே, இவர்கள் எப்படி இஸ்லாமைப் புரிந்து பின்பற்றினார்களோ, அப்படியே நாமும் பின்பற்ற வேண்டும் என்பதை உணர்த்தவே ஸலஃப் கொள்கையைப் பின்பற்றும்படி வலியுறுத்தப்படுகிறது. இவ்வாறு பின்பற்றுவதே சரியான மார்க்கம் என்று நம்பிச் செயல்படுபவரையே ஸலஃபீ எனப்படும். அதாவது, ஸலஃபைப் பின்பற்றுகிறவர். இப்படி அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத்தின் கொள்கையிலும் வழிமுறையிலும் உறுதியாக உள்ளவர்களையே நாம் ஸலஃபீ என்கிறோம். (ப.கு.)

8

பெரியோரிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும்?

❀

இஸ்லாம் அழைப்புவிடுக்கிற, கட்டளையிட்டுள்ள பெரியோருக்குச் செய்ய வேண்டிய கடமைகள். அவை:

முதலாவது: கண்ணியப்படுத்துதல்

கண்ணியப்படுத்த வேண்டும். நம்மில் பெரியோர்களைக் கண்ணியப்படுத்தாதவர் நம்மைச் சேர்ந்தவரல்ல என்பதாக ஏற்கனவே ஒரு நபிமொழி வந்துள்ளது. இது மேன்மைமிக்க வாசகமாகும். இதற்கு உயர்வான பல கருத்துகள் உண்டு. வயோதிகர் கண்ணியப்படுத்தப்பட வேண்டும். அவருக்கென்று தனி இடம் இருக்கிறது. உள்ளங்களில் ஒரு மதிப்பு மரியாதை இருக்கிறது. அவருக்குக் கண்ணியம் இருக்கிறது; மேன்மை இருக்கிறது. இது பெரியோர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்ய வேண்டும் என்பதை உணர்கின்ற வழிமுறையாகும். ஏனென்றால், பெரியோர்களைக் கண்ணியப்படுத்தாதவர் அவர்களுக்குரிய கடமைகளை நிறைவேற்றியவராக முடியாது. அவர்களை கண்ணியப்படுத்துவது அவர்களுக்குச் செய்கின்ற ஒரு கடமையாகும். கண்ணியப்படுத்துதல் என்பது அவர்களுக்குச் செய்ய வேண்டிய சில கடமைகளைச் செய்வதற்கும் வழிவகுக்கும். பெரியோர்களைக் கண்ணியப்படுத்தும்போது உன்னுடைய உள்ளத்தில் அவர்களைப்பற்றிய மதிப்பும் மரியாதையும் ஏற்படும். அவர்களுக்குள்ள அந்தஸ்தையும் கண்ணியத்தையும் நீ அறிந்துகொள்வாய். இதுவே அவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளில் ஒன்றாகும்.

இப்னு ஸஹ்ல் அவர்களின் கொலைக்கான) உயிரீட்டுத் தொகையை (அவரின் சகோதரர்) அப்துற் றஹ்மான் இப்னு ஸஹ்ல் அவர்களுக்குக் கொடுத்துவிட்டார்கள். (புகாரீ 3173)

இந்த நபிமொழியில் நபி ﷺ அவர்கள், 'பெரியவர்களைப் பேச விடு. பெரியவர்களைப் பேச விடு' என்று கூறினார்கள்.

பல் துலக்குவது குறித்த நிகழ்விலும் பெரியோர்களை முற்படுத்துவதை நபி ﷺ அவர்கள் முக்கியத்துவப்படுத்திக் கூறியுள்ளார்கள்.

மாலிக் இப்னு முஙவ்வல் என்பவர் கூறுகிறார்: தல்ஹா இப்னு மூஸர்ரஃப் என்பவரோடு நான் நடந்துகொண்டிருந்தேன். நாங்கள் மலீக் என்ற இடத்தை வந்து சேர்ந்தோம். அப்போது அவர் என்னை முந்திச் சென்று பிறகு என்னிடத்தில் கூறினார்: 'நீர் என்னைவிட ஒரு நாள் மூத்தவர் என்று நான் அறிந்திருந்தாலும் உன்னை நான் முந்திச் சென்றிருக்கமாட்டேன்.'

ஃபள்ல் இப்னு மூஸா என்பவர் கூறுகிறார்: நானும் அப்துல்லாஹ் இப்னு முபாரக் அவர்களும் ஒரு குவியலை வந்தடைந்தோம். 'நீங்கள் முன்னால் செல்லுங்கள்' என்று அவரிடத்தில் நான் கூற, 'நீங்கள் முன்னே செல்லுங்கள்' என்று அவர் கூறினார். அப்போது அவருடைய வயதை எண்ணி கணக்கிட்டேன். அவரைவிட இரண்டு ஆண்டுகள் பெரியவராக நான் இருந்தேன்.

ஆறாவது:
அவர்களின் வயோதிகத்தையும் பலவீனத்தையும் புரிந்து அணுகுதல்

பெரியவர்களுடைய வயோதிகம் மற்றும் பலவீனத்தின் காரணமாக அவர்களுடைய உடல்ரீதியாகவும் உள்ளரீதியாகவும் ஏற்பட்டிருக்கக்கூடிய தளர்வைக் கவனித்து நடந்து கொள்ள வேண்டும். இதைப்பற்றி வாலிபர்களில் பெரும்பான்மையோர் அறியாமல் இருக்கிறார்கள். வயோதிகத்தின் காலக்கட்டம் என்பது உடலிலே பலவீனமும் உடல்நலத்திலும் உணர்விலும் பலவீனம் உள்ள காலக்கட்டமாகும். அல்லாஹ் தஆலா உனக்கு வாழ்நாளை நீட்டித் தந்தால் இது போன்ற